ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1887/20 - 2014 නොවැම්බර් මස 05 වැනි බදාදා - 2014.11.05

*1887/20 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 4/81* (II)

**1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் பிரிவு 23ஒ, பிரிவு 23ஓ என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான மேற்கூறப்பட்ட சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழ் சூழல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

சுசில் பிரேமஜயந்த,<br>
சூழல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்.

கொழும்பு,<br>
*2014, ஒற்றோபர் 17.*

ஒழுங்குவிதிகள்

*2003, யூன் 30 ஆம் திகதிய 1295/11 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2003 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, தேசிய சூழல் (புகை வெளியேற்றம், எரிபொருள் மற்றும் வாகன இறக்குமதி நியமங்கள்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-*

(1) அவற்றின் 4 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் மற்றும் (2) ஆம் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"4. (1) மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதியும் மத்திய சூழல் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியும், இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக, ஏதேனும் மோட்டார் வாகனத்தின் வாகனஞ்சார் புறம்போக்கி புகை வெளியேற்றல் மட்டங்களைப் பரீட்சித்து சான்றுப்படுத்தும் நோக்கத்துக்காக ஏதேனும் வாகன புகை வெளியேற்றல் பரீட்சிப்பு நிலையத்தைத் தராதர அங்கீகாரம்பெற்ற வாகன புகை வெளியேற்றல் பரீட்சிப்பு நிலையமொன்றாக அதிகாரமளித்தல் வேண்டும்.

(2) ஆள் எவரும் வாகன புகை வெளியேற்றப் பரீட்சிப்பு நிலையமொன்றினை, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23அ என்னும் பிரிவின் கீழ் பெறப்பட்ட செல்லுபடியான சூழல் பாதுகாப்பு உரிமமின்றித் தொழிற்படுத்தலாகாது.

(2) அவற்றின் முதலாம் அட்டவணையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"முதலாம் அட்டவணை

(அ) பெற்றோல் வாகனங்கள் :

| வானத்தின் வகை | வெளியேற்ற நியமங்கள் | | குறிப்புகள் |
|---|---|---|---|
| | காபன்மொனொக்சைட் CO(% V/ V) | ஹைட்ரோ காபன் HC (ppm VV) | |
| மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் முச்சக்கர வண்டிகள் தவிர்ந்த ஏனைய பெற்றோல் வாகனங்கள் | 3.0 | 1,000 | இரண்டும் பயன்படுத்தப் படாதவை மற்றும் 2500 RPM/சுமை இல்லை |
| பெற்றோல் மோட்டார் சைக்கிள்கள் | 4.0 | 6,000 | இரண்டும் பயன்படுத்தப் படாதவை மற்றும் 2,500 RPM/சுமை இல்லை |
| பெற்றோல் மோட்டார் முச்சக்கர வண்டிகள் | 4.0 | 6,000 | இரண்டும் பயன்படுத்தப் படாதவை மற்றும் 2,500 RPM/சுமை இல்லை |

**சொற்சுருக்கம் :**

%V/V - கன அளவிலான நூற்று வீதம்
ppm V/V - கன அளவில் மில்லியன் ஒன்றுக்கான பாகங்கள்
RPM - நிமிடம் ஒன்றுக்கான சுழற்சிகள்

(ஆ) டீசல் வாகனங்கள் :

| வாகனத்தின் வகை | வெளியேற்றல் நியமங்கள் புகை புகாவிடாத் தன்மையின் அடிப்படையில் ஒழிவுக் கெழு /K காரணி ($m^{-1}$) | குறிப்புகள் |
|---|---|---|
| டீசல் வாகனங்கள் | 4.0 | சடுதி விரைவாக்கத்தின் மீது |

**சொற்சுருக்கம் :**

K காரணி - உறிஞ்சற் குறைகம்
சடுதி விரைவாக்கம் - SAE யில் விதந்ததுரைக்கப்பட்ட நடைமுறை J 1667 இல் வரைவிலக்கணம்
- கூறப்பட்ட அதே பொருளைக் கொண்டிருக்கும்.".

11- 560